# தமிழகத்தில் 3 ஆயிரம் காவலர்கள் விரைவில் தேர்வு

● பேரவையில் முதல்வர் ஸ்டாலின் தகவல்

**சென்னை**

தமிழகத்தில் 3 ஆயிரம் காவலர்கள் விரைவில் தேர்வு செய்யப்படுவார்கள் என்று முதல்வர் ஸ்டாலின் சட்டப்பேரவையில் அறிவித்தார்.

சட்டப்பேரவையில் நேற்று காவல், தீயணைப்பு துறைகளின் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்துக்கு பதில் அளித்து முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:

அரசு எடுத்த நடவடிக்கைகள் மூலமாக, பொறுப்பேற்ற ஓராண்டு காலத்தில் திருட்டு வழக்குகளில் 53 சதவீதம் கண்டுபிடிக்கப்பட்டு, ரூ.144.03 கோடி மதிப்புள்ள 43 சதவீதம் சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன. முன்னெச்சரிக்கை தகவல் அடிப்படையில், கடந்த ஓராண்டில் 268 கொலைகள் தடுக்கப்பட்டுள்ளன.

அதிமுக ஆட்சியுடன் ஒப்பிடும்போது கடந்த ஓராண்டு காலத்தில், கொலை, கொள்ளைகள் குறைந்துள்ளன. கூலிப்படைகளின் அட்டகாசத்துக்கு இந்த அரசு முற்றுப்புள்ளி வைத்திருக்கிறது. விரைவில் முற்றிலும் ஒழிக்கப்படும்.

அதிமுக ஆட்சியின் கடைசி 2 ஆண்டுகளில் ஸ்டெர்லைட் உட்பட 16 போலீஸ் துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நடந்துள்ளன. ஆனால், கடந்த ஓராண்டுகால திமுக ஆட்சியில் அந்த நிலை ஏற்படவில்லை.

## காவல் நிலைய மரணங்கள்

காவல்நிலைய மரணங்கள் எந்த ஆட்சியில் நடைபெற்றாலும் நியாயப்படுத்த முடியாது. விசாரணையின்போது உரிய வழிகாட்டுதல்களைப் பின்பற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது. குற்றவாளிகளைத் திருத்தும் முயற்சியை காவல் துறையினர் செய்ய வேண்டும். அதேநேரம் கொடுங் குற்றம் செய்தவர்கள் வெளியில் வர இயலாத வகையில் பல்வேறு சட்டப்பிரிவுகளில் கைது செய்யப்பட வேண்டும்.

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மீது திமுக அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்ற நம்பிக்கையில், பாதிக்கப்பட்ட பெண்கள், மாணவிகள் அச்சமின்றி புகார் அளித்து வருகின்றனர். குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்க கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குட்கா, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களை ஒழிக்க இன்னும் கடுமையான நடவடிக்கைகள் வரும் நாட்களில் எடுக்கப்படும்.

'நம்மைக் காக்கும் 48' என்ற உயிர்காக்கும் திட்டத்தால், விபத்து மரணங்கள் இந்த ஆட்சியில் குறைந்துள்ளது.

சென்னையில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவிக்களை பராமரிக்க ஏற்கெனவே அரசு நிதி ஒதுக்கியுள்ளது. பிற பகுதிகளில் உள்ள சிசிடிவிக்களைப் பராமரிக்கவும் போதிய நிதி ஒதுக்கப்படும்.

கடவுச்சீட்டு விசாரணைக்காக காவல் நிலையத்துக்கு வரவேண்டிய அவசியம் இல்லை என்ற நிலை விரைவில் ஏற்படுத்தப்படும்.

## புதிய காவலர்கள் நியமனம்

விரைவில், 3 ஆயிரம் புதிய காவலர்கள் தேர்வு செய்யப்பட உள்ளனர். இதில், பெண்களுக்கான இடஒதுக்கீடு நிச்சயமாக உறுதி செய்யப்படும். இந்த அரசைப் பொருத்தவரை, தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து வருகிறது. இதனால், காவல் துறை, மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் துறையாக மாறியிருக்கிறது.

அனைவருக்குமான 'திராவிட மாடல்' வளர்ச்சியின் அடித்தளமாக சமூக நல்லிணக்கம் - சமூக நீதி - சமநீதி - சட்டநீதி ஆகியவை வடிவமைக்கப்பட்டுள்ளன. இவற்றை காக்க காவல்துறை துணைபுரிய வேண்டும். என்னைப் பொருத்தவரை, மாநிலத்தின் அமைதியே முக்கியம். உங்களது ஒவ்வொரு நொடியிலும் மக்களின் நல்வாழ்வு கலந்துள்ளது என்ற எண்ணத்தோடு நீங்கள் அனைவரும் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## எதிர்க்கட்சி தலைவருக்கு நன்றி

சட்டப்பேரவையின் இந்த கூட்டத்தொடர், ஜனநாயக நெறி முறைப் படியும், மக்களாட்சியின் மாண்பைக் காக்கும் வகையிலும் நடைபெற்றுள்ளது. பேரவைக் கூட்டம் ஆக்கப்பூர்வமாக நடைபெறக் காரணமாக அமைந்த பேரவைத் தலைவரைப் பாராட்டுகிறேன். ஆசிரியராக வாழ்க்கையை தொடங்கிய அவர், பேரவைத் தலைவராக மட்டுமின்றி தலைமை ஆசிரியரைப் போல வழிநடத்தினார். அரசுக்கு ஆக்கபூர்வமான பல்வேறு ஆலோசனைகளை வழங்கியுள்ள எதிர்க்கட்சித் தலைவர், எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கும் நன்றி.

ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்பது தேர்தல் களத்தில்தான். சட்டப்பேரவையில் மக்களுக்கான நன்மையைப் பற்றி நாம் சிந்திக்கும்போது, அனைவரும் ஒரே கட்சிதான் - அதுதான் மக்கள் கட்சி.

மக்களைக் காக்க, மக்களாட்சி மாண்பைக் காக்க, மக்கள் இட்ட கட்டளையை மனதில் ஏந்தி எந்நாளும் உழைப்போம்

இவ்வாறு முதல்வர் கூறினார்.